பொருள் எண்.1

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 08.08.2019 ஆம் தேதிய தொலைபேசி செய்தில், தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் : 2019–20 –ன் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சேதமடைந்துள்ள சாலைகளை ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில், சீரமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | குளச்சல் நகராட்சி – வார்டு எண்.1–ல் பவுண்டரி சாலையில் தார் சாலை அமைத்தல் | 60.00 |
| 2. | குளச்சல் நகராட்சி – வார்டு எண்.2–ல் சி.எம்.சி காலனி பகுதியில் தார் சாலை அமைத்தல் | 25.00 |
| 3. | குளச்சல் நகராட்சி – வார்டு எண்.2–ல் புதுத்தெருவில் தார் சாலை அமைத்தல். | 15.00 |
| | மொத்தம் | 100.00 |

எனவே, மேற்காணும் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகையினை தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு திட்டம் : 2019–20–ன் கீழ், முழு மானியமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கு கேட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1120/2019/இ1

## தீர்மானம் எண்.2104 அங்கீகரிக்கப்பட்டது

பொருள் எண்.2

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி 2005-2006 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரையில் வட்டி கணக்கீடு செய்ய கீழ்காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | Individual Details (Per Employee) Rs. | Abstract Details (one year) Rs. | Print out Charges (per page Rs.) |
|---|---|---|---|---|
| 1 | M/s. RAJREV SOFT SYSTEM CHENNAI - 88 | 60.00 | 6000.00 | 3.00 |
| 2 | M/S. NTECH SOLUTIONS CHENNAI - 59 | 65.00 | 6500.00 | 3.60 |
| 3 | M/S. VENKAT EVENTS CHENNAI-88 | 70.00 | 7000.00 | 3.90 |

மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/s.RAJREV SOFT SYSTEM, சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.10920/2019/பி1

## தீர்மானம் எண்.2105 அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில் ஒப்பந்த பணிகள் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட்டதில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்கள் பெயரில் உள்ள வைப்பு தொகையினை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | இருப்பில் உள்ள வைப்புத்தொகை |
|---|---|---|
| 1 | M/S.ASIATEAH ENGG.ASSOUATIS | ரூ.206660/- |
| 2 | A.விஷ்ணுராம் | ரூ.45540/- |
| 3 | A.விஷ்ணுராம் | ரூ.84250/- |
| 4 | M.M.கிளிட்டஸ் | ரூ.16300/- |

ந.க.எண்.783/2019/இ1

**தீர்மானம் எண்.2106 அங்கீகரிக்கப்பட்டது**
**பொருள் எண்.4**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க.எண்.198/செமதொ/2019 நாள் 15.07.2019-ன் படி, இந்நகராட்சி திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை மாலை மலர் நாளிதழ் சார்பாக 30.07.2019 அன்று வெளியிடப்பட்ட தமிழக அரசின் மூன்றாண்டு சாதனை மலரில் பிரசுரம் செய்த வகையில் விளம்பர கட்டணம் ரூ.9660/-ஐ வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2045/2012/இ1

**தீர்மானம் எண்.2107 அங்கீகரிக்கப்பட்டது**
**பொருள் எண்.5**

இந்நகராட்சி கணணி பிரிவிற்கு தேவையான Huwai Modem 2 எண்ணம் வாங்குவதற்கு ரூ.6000/- செலுத்த கேட்டு M/s.Annai Cable Network, Colachel நிறுவனத்திற்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.135/2010/இ1

**தீர்மானம் எண்.2108 அங்கீகரிக்கப்பட்டது**
**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட புதுத்தெரு முதல் சிங்கன்காவு வரை கட்டப்பட்டுள்ள வடிகால் ஓடையிலிருந்து வரும் கழிவு நீர் சிங்கன்காவு பகுதியில் உள்ள விளை நிலங்களுக்குள் சென்று சேதப்படுத்துவதாக பொது மக்களிடமிருந்து புகார் வரப்பெற்றதால், சிங்கன்காவு பகுதியில் விளை நிலங்களுக்குள் கழிவு நீர் செல்லாத வகையில் மணல் மூட்டைகளை அடுக்கி, கழிவு நீர் சீராக செல்லும் வகையில் Desilting பணியினை மேற்கொள்ள ரூ.76.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு, திட்ட நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க கேட்டு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதற்கு, 24.07.2019 அன்று நடைபெற்ற உயர்மட்ட குழு கூட்ட அறிக்கையில்,நகராட்சி பகுதி குடியிருப்புகளிலிருந்து வெளியற்றப்படும் கழிவு நீர் சிங்கன்காவு பகுதியில் உள்ள கழிவு நீர் ஓடையில் செல்வதால், நகராட்சி மூலம் சிங்கன்காவு பகுதி முதல் நரிக்கல் வரை உள்ள கழிவு நீர் ஓடை தூர் வாரி சுத்தம் செய்யப்பட வேண்டும் என பொதுப்பணி துறையால் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி பகுதியில் நேராய்வு

செய்யப்பட்டதில், நரிக்கல் பகுதி நாகராஜா கோவில் அருகில் அமைந்துள்ள சிறுபாலத்தின் நீர் செல்லும் பகுதி மிகவும் குறுகலாக உள்ளதால், (கழிவு நீர் ஓடையின் அகலம் 4 மீட்டர் மற்றும் நீர் செல்லும் வழி (Vent) 0.90 மீட்டர்) நீர் வரத்து அதிகமாக இருக்கும் போது சிறுபாலம் வழியாக செல்ல முடியாமல் விளை நிலங்களுக்குள் கழிவு நீர் சென்று சேதப்படுத்தும் நிலை உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் சிறுபாலத்தின் நீர் செல்லும் (Vent) பகுதிக்குள் கல் (Cut stone) விழுந்துள்ளது. எனவே, தற்போது உள்ள சிறுபாலத்தினை உடைத்து புதிதாக சிறுபாலம் அமைத்து விளை நிலங்களுக்குள் கழிவு நீர் செல்லாத வகையில் மணல் மூட்டை அடுக்கவும், ஏற்கனவே உடைந்த நிலையில் உள்ள தடுப்பு சுவரை (Retaining Wall) புதிதாக அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே, நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு, தற்போது நரிக்கல் பகுதியில் நாகராஜ் கோவில் அருகில் உள்ள சிறுபாலத்தை உடைத்து புதிதாக சிறுபாலம் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.5,00,000/-க்கும் மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.783/2019/இ1

**தீர்மானம் எண்.2109 அங்கீகரிக்கப்பட்டது**
**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகப்பாலம் அருகில் அமைந்துள்ள நகராட்சி கழிவறை மிகவும் மோசமாக சேதமடைந்து, மாலை நேரங்களில் கடற்கரை பகுதிக்கு வரும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், பொது நலன் கருதி மேற்படி கழிவறையை சீரமைக்கும் பணியினை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.2,10,000/-க்கான மதிப்பீட்டிற்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.883/2019/இ1

**தீர்மானம் எண்.2110 அங்கீகரிக்கப்பட்டது**
**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்குட்பட்ட தூய்மை பாரத இயக்கம் - திடக்கழிவு மேலாண்மை திட்டம் : 2018-19-ன் கீழ், ரூ.21.60 இலட்சம் மதிப்பீட்டில், 12 எண்ணம் மின்கலத்தில் இயங்கும் வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்தி வைக்கவும், மின்கலத்தில் மின்னேற்றம் (Battery Charging) செய்யும் வகையில் 14 எண்ணம் Plug point புதிதாக அமைக்கவும், காமராஜர் பேருந்து நிலைய வளாகத்தில் அம்மா உணவகத்தின் அருகில் அமைக்கப்பட்டுள்ள Shed-ல் புதிதாக நுழைவு வாயில் (Gate) அமைத்து மேற்படி பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,10,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1100-1/2019/இ1

**தீர்மானம் எண்.2111 அங்கீகரிக்கப்பட்டது**
**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4-ல் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.3,25,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு மன்றத் தீர்மானம் எண்.2078 நாள் 28.06.2019-ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணிக்கு திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்த மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத் தீர்மானம் எண்.2097 நாள் 30.07.2019-ன் படி மன்ற ஒப்புதல் பெற்று கடந்த 31.07.2019 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணி துவங்கும் போது, மேற்படி சாலையின் தொடக்கம் முதல் முடிவு வரை பேவர் பிளாக் சாலை போடுமாறு அப்பகுதி பொது மக்கள் மனு அளித்ததை தொடர்ந்து பொது மக்கள் கோரிக்கையை ஏற்று ஏற்கனவே பேவர் பிளாக் சாலை போடுவதற்காக தேர்வு

செய்யப்பட்ட பகுதி போக மீதமுள்ள பகுதியிலும் பேவர் பிளாக் பதிப்பிற்கு மறு மதிப்பீடு ரூ.4,80,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் கூடுதல் நீளத்திற்கு பேவர் பிளாக் பதித்தல் பணியினை மேற்கொள்வதற்கான மறு மதிப்பீட்டுத் தொகை ரூ.4,80,000/-க்கும், மேற்படி பணியினை திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் ஏற்கனவே அளித்துள்ள மதிப்பீட்டு விகிதத்தில் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.810/2019/இ1

**தீர்மானம் எண்.2112 அங்கீகரிக்கப்பட்டது**
**பொருள் எண்.10**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரின் 11.02.2019 ஆம் தேதிய கடிதத்தில், மாவட்ட நிர்வாகம் சார்பில் 15.02.2019 முதல் 25.02.2019 வரை நடத்தப்பட உள்ள புத்தக கண்காட்சி தொடர்பான விவரங்களை பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காக துணி பேனர்கள் மூலம் விளம்பரம் செய்ய தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இந்நகராட்சி சார்பாக 6 எண்ணம் துணி பேனர்கள் தயார் செய்த வகையில் M/s.Dheen Graphics, Madurai நிறுவனத்திடமிருந்து ரூ.14,986/-ஐ வழங்க கேட்டு பட்டியல் (எண்.290 நாள் 22.02.2019) பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1036-1/2019/இ1

**‘தீர்மானம் எண்.2113 அங்கீகரிக்கப்பட்டது**
**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடைகள், கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள், டாக்டர் அம்பேத்கார் நவீன மீன்சந்தை கடைகள் மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகள் ஆகியவற்றிற்கு 16.08.2019-ல் பொது ஏலம் நடைபெற்றது. கடையின் ஏல விபரம் பின்வருமாறு,

<u>காமராஜர் பேருந்து நிலைய கடைகள்</u>

| வ.எண் | கடை எண் | பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி |
|---|---|---|---|
| 1 | 25 | P.முகம்மது சாதிக் | 2300/- |
| 2 | 26 | P.முகம்மது சாதிக் | 2300/- |
| 3 | 27 | M.அர்ச்சுனன் | 2300/- |

மேற்காணும் கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. மேற்படி கடைகளில் கலம் 4-ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலத்தாரர்கள் ஏலக்கேள்வி கேட்டுள்ளதால் அதனை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

மேலும் காமராஜர் பேருந்து நிலையத்தின் கடை எண்கள் 22 முதல் 24,36,37,39 கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்.32, நவீன மீன்சந்தை கடை எண்கள் தரை தளம் 3,4,7 முதல் தளம் கடை எண்.1 ஆகிய கடைகளுக்கு முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாததால் மேற்படி கடைகளை மறு ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.2114 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.2

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்கள்.47 முதல் 52 வரிவிதிப்பு எண்.148/2011005-ஐ திரு.பெரிய சுவாமி என்பவர் 2011 ஆம் ஆண்டு முதல் கடையை வாடகைக்கு எடுத்துள்ளார். கடைக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.1,18,820/- இந்நகராட்சி முன்வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ளது. கடைக்கு 2018 ஏப்ரல் முதல் 2019 ஆகஸ்ட் வரை ரூ.1,59,171/- நிலுவையாக உள்ளது. முன்வைப்புத் தொகையை மாத வாடகை அதிகமாக உள்ளதால் மேற்படி கடையின் முன்வைப்புத் தொகையிலிருந்து மாத வாடகை ஈடு செய்யவும், பாக்கியுள்ள தொகையை நடவடிக்கை மேற்கொள்ளவும், கடையின் உரிமத்தை 01.09.2019 முதல் ரத்து செய்துவிட்டு கடையை மறு ஏலம் விடவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.2115 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.3

இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.648/2019/அ1 நாள் 30.07.2019-ன் படி, 2019-2020 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சியிலிருந்து செலுத்த வேண்டிய பங்குத்தொகை ரூ.50,000/-ம் செலுத்த தெரிவிக்கப்பட்டது. எனவே, தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு பங்குத்தொகை ரூ.50,000/- செலுத்த மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1542/2001/அ1

**தீர்மானம் எண்.2116 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.4

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் 2018-19 ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34, அறிவிப்பு எண்.14-ன் படி, இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் தேர்வு செய்யப்பட்ட 24 இடங்களில், தானியங்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் மையங்கள் அமைப்பதற்காக, 17.12.2018 அன்று Expression of interest (EOI) விளம்பரம் செய்யப்பட்டதில், M/s.Aqua Engineers and consultants India pvt ltd., Chennai நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி, நகராட்சி நிர்வாக ஆணையரின் வழிகாட்டுதல் நெறிமுறைகளுக்கு உட்பட்டு அளிக்கப்பட்டதால், ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கு, மன்ற தீர்மானம் எண்.1979, நாள் 03.01.2019 -ன் படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, கடந்த 07.01.2019 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் ஒப்பந்த காலம் முடிவுற்ற பின்னரும், மேற்படி நிறுவனத்தால் பணியினை மேற்கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததால், 15 நாட்களுக்குள் பணியினை துவங்க கேட்டு

அறிவிப்பு வழங்கப்பட்டதற்கும் எவ்வித தகவலும் பெறப்படாத நிலையில், 12.06.2019 அன்று இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டு 30 நாட்கள் கடந்து விட்டதால், தமிழக அரசின் மானிய கோரிக்கை அறிவிப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு, M/s.Aqua Engineers and Consultants India pvt.ltd ., Chennai நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவை ரத்து செய்து, ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1477/2018/இ1

**தீர்மானம் எண்.2117 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்.25, வரிவிதிப்பு எண்.148/2013004-ஐ திரு.செல்வம் என்பவர் மாத வாடகைக்கு எடுத்துள்ளார். மேற்படி கடைக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.10,000/- வங்கி வரைவோலை எண்.945644, நாள் 17.10.2013-ல் இந்நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மேற்படி கடையை தன்னால் நடத்த இயலவில்லை என்பதால் கடையினை நகராட்சியில் ஒப்படைக்க உள்ளார். எனவே மேற்படி கடைக்கு ஜுன் 2017 முதல் ஜுலை 2019 வரை செலுத்த வேண்டியுள்ள மாத வாடகை ரூ.30680/-ஐ முன்வைப்புத் தொகையில் ஈடு செய்யவும், மீதமுள்ள ரூ.30680/- சம்மந்தப்பட்ட வாடகைதாரர் திரு.செல்வம் என்பவரிடமிருந்து வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும், கடையை மறு ஏலம் விடவும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.2118 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு சாம்பார் வைக்கும் அண்டா பழுது அடைந்துள்ளதால் புதிதாக வாங்குவதற்கு இரண்டு உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

பெறப்பட்ட விலைப்புள்ளி கீழ்க்கண்டவாறு

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலை ரூ. |
|---|---|---|
| 1 | பேபி அம்மா ஏஜென்சி, நெய்யூர் | 5900/- |
| 2 | சித்ரா ஸ்டோர்ஸ் பாத்திரம் வியாபாரம், குளச்சல் | 6000/- |

மேற்படி இரண்டு விலைப்புள்ளிகளில் பேபி அம்மா ஏஜென்சி நெய்யூர் வழங்கியுள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வினியோக உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1117/2015/அ1

**தீர்மானம் எண்.2119 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 24 வார்டுகளிலும் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, கடைவாடகை ஆகியவற்றிற்கு நிலுவை வைத்திருப்பவர்களுக்கு இறுதி அறிவிப்பு நோட்டீஸ் வழங்குவதற்கு 500 (5 pads) தாசன் அச்சகத்தில் அச்சடித்த வகையில் ரூ.950/- வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.4826/2012/அ1

**தீர்மானம் எண்.2120 அங்கீகரிக்கப்பட்டது**
**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள்.29,30 வரிவிதிப்பு எண்கள்.148/2013002, 148/2013003 ஆகியவற்றிற்கு 30.06.2019-டன் உரிமம் 6 ஆண்டுகள் முடிவடைந்துள்ளதால், மேலும் 01.07.2019 முதல் 30.06.2022 வரை மூன்றாண்டுகளுக்கு வாடகை தொகையில் 15% வரி உயர்வு செய்ய மன்ற அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வரிவிதிப்பு எண் | கடை எண். | வாடகைதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15% உயர்வு செய்த வாடகை | உயர்வு செய்யப்பட்ட பின்னர் வாடகை தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 148/2013002 | 29 | L.I.C மினி அலுவலகம் | 1150/- | 173/- | 1323/- |
| 2 | 148/2013003 | 30 | L.I.C மினி அலுவலகம் | 1150/- | 173/- | 1323/- |

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.2121 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குட்பட்ட பூக்குழி பகுதியில் குடிநீர் சீராக கிடைக்காத காரணத்தால் 80mm Sluice valve - 2 எண்ணம் பொருத்தவும் கொட்டில்பாடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பிராதான குழாய் மற்றும் பகிர்மான குழாயை மாற்றி 110MM PVC பகிர்மான குழாய் மற்றும் 90 MM pvc பிரதான குழாய் புதியதாக அமைக்கவும் துறைமுகதெரு பூங்காவில் 30M நீளமுள்ள 20MM Hose pipe 2 எண்ணம் வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.75,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.746/2019/இ2

**தீர்மானம் எண்.2122 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.10

தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவ உரிமம் வழங்குதல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2018-ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டங்களுக்கான திருத்தச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/2018) தொடர்பான அரசாணை (நிலை)எண்.15, நகராட்சி நிர்வாகம் (ம) கு.வ (M.CI) துறை நாள் 31.01.2019 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் விளம்பர பலகை நிறுவ உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகள் 2003-ல் திருத்தங்கள் மேற்கொண்டு வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.17 ந.நி (ம) கு.வ (M.CI) துறை நாள் 31.01.2019 ஆகிய இரு அரசாணைகளும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.259/2019/TPI

**தீர்மானம் எண்.2123 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.11

இந்நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர் தோழமை காலனி பகுதியில் கதவு எண்.4-361-ற்கு பின்புறம் சிறுவர் பூங்கா என வகைப்படுத்தப்பட்ட இடம் தனியாரால் Shed அமைத்து ஆக்கிரமிக்கப்பட்டதினை 25.07.2019 அன்று நகராட்சி மூலம் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஆக்கிரமிப்பு அப்புறப்படுத்திய வகையில் ஆன செலவுத் தொகை ரூ.5500/- நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

ந.க.எண்.969/2019/TPI

**தீர்மானம் எண்.2124 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.12

இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் குப்பை கழிவுகள் அதிகமாக சேர்ந்துள்ளதால் தனியார் JCB இயந்திரம் மூலம் ஒதுக்கி சரி செய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனம் | JCB | நேரம் |
|---|---|---|---|
| 1 | ஷாரோன் கன்ஸ்ட்ரக்சன், திக்கணங்கோடு | 800 | ஒரு மணி நேரத்திற்கு |
| 2 | அன்னை எர்த் மூவர்ஸ், கருங்கல் | 850 | ஒரு மணி நேரத்திற்கு |
| 3 | அரோபனா அன்னை எர்த் மூவர்ஸ், திக்கணங்கோடு | 900 | ஒரு மணி நேரத்திற்கு |

மேற்படி பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஷாரோன் கன்ஸ்ட்ரக்சன், திக்கணங்கோடு நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.998/2017/எச்1

**தீர்மானம் எண்.2125 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.13**

இந்நகராட்சி திட்டப் பணிகள் தொடர்பான விளம்பரத்தை தமிழ் முரசு பத்திரிக்கையின் தொழில் மலர் 2019-ல் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணம் ரூ.9,975/-ஐ வழங்க கேட்டு M/s.Kal Publications, Nagercoil நிறுவனத்திடமிருந்து பட்டியல் எண்.3300176476 நாள் 14.08.2019 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை ரூ.9,975/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2045/2012/இ1

**தீர்மானம் எண்.2126 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.14**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 75 K 6526 -ல் 2 டயர்கள் தேய்ந்து ஆபத்தான நிலையில் உள்ளது. மேற்படி வாகனத்தில் கடந்த 10.03.2016-ல் டயர்கள் மாற்றப்பட்டு, தற்போது வரை 55,700 கி.மீ தூரம் ஓடி உள்ளது. அலுவலக பணிகளுக்கு ஈப்பு வாகனம் அதிக அளவு பயன்படுத்தப்பட்டு வருவதால், அவசர அவசியம் கருதி, பழுதடைந்துள்ள 2 டயர்களை மாற்றுவதற்கு புதிதாக 2 டயர்களை வாங்க M/s.Tyre Zone, Marthandam நிறுவனத்திடமிருந்து ரூ.15,000/-க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே, M/s.Tyre Zone, Marthandam நிறுவனத்திடமிருந்து புதிய டயர்களை வாங்குவதற்கும், அதற்கான செலவினம் ரூ.15,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7057–1/2011/இ1

**தீர்மானம் எண்.2127 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள போர் வெற்றித்தூண் நினைவு நாள் கொண்டாட்டம் 31.07.2019 அன்று 19 Madras, Pangode Military Station , Trivandrum இராணுவ படையினரால் அனுசரிக்கப்பட்டதை முன்னிட்டு, மேற்படி போர் வெற்றித்தூண் அமைந்துள்ள பூங்காவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க, வெற்றித்தூண் பூங்கா முழுவதும் சுற்றுச்சுவர் வர்ணம் பூசுதல், பட்டு போன நிலையில் காணப்பட்ட புல் தரையினை புதிதாக மாற்றி அமைத்தல், காய்ந்து போன புல், புதர்களை வெட்டி மாற்றுதல், சிற்பங்களுக்கு Oil Painting செய்தல், போர் வரலாறு குறித்த Flex Board புதிதாக வைத்தல் மற்றும் கழிவறை கதவுகளை மாற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.70,000/-க்கு மதிப்பீடு தயார் செய்து, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி பிரிவு 15-ன் கீழ் பணியினை மேற்கொண்டு, அதற்கான செலவினம் ரூ.69,524/-ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.9842019/இ1

**தீர்மானம் எண்.2128 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.**16

இந்நகராட்சிக்கு 8-வது உயர்மட்ட குழு 8 SHPC கூட்ட நடவடிக்கைகளின் படி, தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் : 2018-19-ன் கீழ், 12 எண்ணம் மின்கலத்தில் வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. தற்போது இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள 45 பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டதில், 30 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக 5 தனியார் பணியாளர்கள் தேவைப்படுவதால் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் தினக்கூலி பட்டியலின் படி, ஒப்பந்த பணியாளர்களை ஏற்கனவே 30 தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்த வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ள பைரவி பவுண்டேஷன் மூலம் பெற்று பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.**1712/2017/**எச்**1

## தீர்மானம் எண்.2129 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.**17

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பருவமழை கால முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள கொசுப்புழு ஒழிப்பதற்கு தேவையான கீழ்காணும் மருந்துகள் இருப்பில் இல்லை.

1. பைரித்திரம் (2%) - 80 லிட்டர்
2. அபேட் - 40 லிட்டர்

எனவே மேற்காணும் மருந்துகளை வாங்குவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1,75,000/-க்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.**1388/2009/**எச்**1

## தீர்மானம் எண்.2130 அங்கீகரிக்கப்பட்டது

ஆணையர்/தனி அலுவலர்,
குளச்சல் நகராட்சி